# விடை தேடும் வினாக்கள்



## காவியத்தில் திருப்புமுனைகள்

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details

www.saivamonline.com



www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 3. காவியத்தில் திருப்புமுனைகள்

மாதவியின் அரங்கேற்றத்திற்குக் கோவலன் செல்லாதிருந்தால், சிலப்பதிகாரக் காவியம் உருப்பெற்றிருக்காது. கைகேயி வரம் கேட்டிருக்காவிட்டால் இராமபிரான் வாழ்க்கை அயோத்தியிலேயே முடங்கிப் போயிருக்கும். சிவபெருமான் சுந்தரரைத் திருமணத்தில் தடுத்தாட்கொள்ளாதிருந்தால் பெரியபுராணமே உருப்பெற்றிருக்காது. சூதாட்டம் ஒன்று நடவாதிருந்தால் பாரதப் போருக்குத் தேவையே இருந்திருக்காது. உதயகுமரன், கொலை செய்யப் பெறாதிருந்தால் ·மணிமேகலை அறச் செல்வியாக உயர்ந்திருக்க வழியே இல்லை.

திருப்புமுனை, காவியத்தின் ஓர் அங்கமன்று; அதுவே காவிய வளர்ச்சியின் ஆணிவேர். ஆழமாக ஆராய்ந்தால், நீரோட்டமாக நடையிட்டு வந்த கதை ஒன்று, காவியமாக உருப்பெறத் தொடங்குவதே திருப்புமுனைக்குப் பின்னர்தான். இந்தத் திருப்புமுனையைக் கையாள்வதில்தான் கவிஞனின் திறமையே வெளிப்படுகின்றது. அழகிய, பெண் ஓவியம் ஒன்றற்குக் கண் திறப்பது போல், காவிய அழகுணர்ச்சியே, திருப்புமுனையில் தான் கருக்கொண்டு வளர்கிறது. தமிழ்க் கவிஞர்கள், காவியத் திருப்புமுனைகளைக் கையாள்வதில் மாபெரும் வெற்றி கண்டவர்கள். கதை ஓட்டத்தை மட்டும்

www.saivamonline.com

நிகழ்த்தாமல், கண்ணுக்குப் புலப்படாக் காவிய நுட்பங்களையும், தாம் அமைத்த திருப்புமுனைகளால் இழைத்தமைத்த பெருமை அவர்களுக்குண்டு.

நாம் காவியங்களைப் படைத்த அளவிற்கு, அவற்றை ஆய்ந்து இனங்கண்டு காப்பியக் கொள்கைகளை வகுத்தவர்கள் அல்லர். ஒரு மொழியின் காவிய இலக்கணத்தை, அம்மொழியின் முதற் காவியந் தொடங்கி வகுக்கத் தவறிய தொன்மொழியாளர்களுள் தமிழரும் அடங்குவர். சிலப்பதிகாரத்தை ஆய்ந்து, நாம் காவிய இலக்கணம்

---

**மாதவியின் அரங்கேற்றத்திற்குக் கோவலன் செல்லாதிருந்தால், சிலப்பதிகாரக் காவியம் உருப்பெற்றிருக்காது. கைகேயி வரம் கேட்டிருக்காவிட்டால் இராமபிரான் வாழ்க்கை அயோத்தியிலேயே முடங்கிப் போயிருக்கும். சிவபெருமான் சுந்தரரைத் திருமணத்தில் தடுத்தாட்கொள்ளாதிருந்தால் பெரியபுராணமே உருப்பெற்றிருக்காது. சூதாட்டம் ஒன்று நடவாதிருந்தால் பாரதப் போருக்கு தேவையே இருந்திருக்காது. உதயகுமரன் கொலை செய்யப் பெறாதிருந்தால், மணிமேகலை அறச்செல்வியாக உயர்ந்திருக்க வழியே இல்லை.**

---

படைக்கவில்லை. மணிமேகலை நமக்கு மேல்வரிச்சட்டமாக ஒருபோதும் அமைந்ததில்லை. தமிழ் இலக்கியங்கள் எவை? தமிழ்மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் எவை, என்ற வேறுபாட்டு உணர்ச்சியே தமிழ் ஆய்வாளர் பலரிடம் இல்லை. சிலப்பதிகாரமும், சிந்தாமணியும் தமிழ்க் காவியங்கள்தாம். ஐம்பெருங்காப்பியப் பட்டியலிலும் இவை இடம் பெறுகின்றன. ஆனால், இரண்டும் ஒன்றா? சிலம்பு, கதைக் கருவாலும், காப்பிய உருவாலும் தமிழ்க் காவியம். சிந்தாமணி வடமொழி மூலக் கருவின்மேல் தமிழ்மொழியில் புனையப்பெற்ற காவியம். தமிழர்



www.saivamonline.com

நாகரிகம், மற்றும் பண்பாட்டு ஆய்வுக்குச் சிலம்பே துணை செய்யவல்லது. . சிந்தாமணி காப்பியக் கட்டமைப்புக்கும், யாப்பியல் வளர்ச்சிக்கும் ஆய்வுப் பொருளாதல் கூடுமே தவிர, தமிழர் நாகரிகப் பண்பாட்டு ஆய்விற்கு அதிலே எந்த அளவிற்கு இடமுண்டு?

தண்டியலங்காரமும், மாறன் அலங்காரமும், பாட்டியல் நூல்களும் வகுத்துரைத்த காவிய இலக்கணங்கள், தமிழ்க் காவிய இலக்கணங்களாக உணரப் பெற்ற பிழைபாடு, நமது மெத்தனப் போக்கின் விளைவால் அமைந்தது. முதற் காவியமாகப் போற்றப் பெறும் சிலப்பதிகாரத்தை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு காவியத் திருப்புமுனைகள் பற்றி இதுவரை நாம் என்ன இலக்கணம் வகுத்தோம்? காவியக் கட்டமைப்பிற்காவது அதனை முதலாகக் கொண்டோமா? சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பு ஒரு வகை, சிந்தாமணி வேறுவகை, இராமாயணம் பிறிதோர்

**திருப்புமுனை, காவியத்தின் ஓர் அங்கமன்று; அதுவே காவிய வளர்ச்சியின் ஆணிவேர். ஆழமாக ஆராய்ந்தால், நீரோட்டமாக நடையிட்டு வந்த கதை ஒன்று காவியமாக உருப்பெறத் தொடங்குவதே திருப்புமுனைக்குப் பின்னர்தான்.**

வகை, பெரியபுராணம் காவியம்தானா என்று இன்னும் சிலர் கேட்கும் வகை. தமிழில் காணப்படும் மிகச் சிலவாய காவியங்களுக்கிடையே கூட, ஒருமித்த கட்டமைப்பு இல்லாமல் போனதற்கு, இந்த நம்மவர்களின் மேலாண்மையின்மையே காரணம்.

இளங்கோவடிகள் கையாண்டுள்ள காவியத் திருப்புமுனைகள் வியப்பூட்ட வல்லன. தமிழில் எழுந்த முதற்காவியம் என்ற உணர்வில் இவ்வியப்பு இரட்டிப்பாகிறது. பூம்புகார்ச் செல்வக் குடும்பத்துக் கோவலன் கண்ணகியை மணந்ததோ, அவர்கள் மனையறம் படுத்தப்பட்டதோ, தாரும் மாலையும் மயங்க அவர்கள் கூடிக் களித்ததோ காவியப் புனைவுக்கு இசைந்த கதைப் பகுதிகள் ஆக மாட்டா. மாதவி



www.saivamonline.com

அரங்கேற்றம் கண்டு, அவள் கலையாற்றல் கண்டு, அவள் வீதியில் விலை பேசக் கண்டு ''மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு'' என்றதும், வடு நீங்கு சிறப்பின் தன் மனை அகம் மறந்து மாலை வாங்கி மாதவி பின்னால் கோவலன் போகின்றானே அங்கேதான் சிலம்பின் முதல் திருப்பம் அமைகிறது. ஒரு குடும்ப வாழ்க்கை காவியமாக அரும்பத் தொடங்குகின்றது. ஒரு குடும்பப் பெண் பத்தினியாக உயரத் தொடங்குகின்றாள். ஒரு செல்வன் கலைஞனாகின்றான். ஓர் ஆடுமகள் குலமகளாக உயர்கின்றாள். காவியம் பயில்வோர் கண்கள் அகல விரிகின்றன. அவர் நெஞ்சம் கண்ணகிக்காக இரக்கம் கொள்கிறது. கோவலனை ஏசுகின்றது. மாதவியைத் தூற்றத் துணிகிறது.

இந்த ஒரு திருப்பத்தை உருவாக்கக் கவிஞன் எங்கே தொடங்குகின்றான்? கோவலன் கண்ணகியை விடுத்து மாதவிபால் பிரிந்து சேர்வது காவியத்தின் மூன்றாவது காதையில்தான். ஆனால்

---

**அழகிய, பெண் ஓவியம் ஒன்றற்குக் கண் திறப்பது போல் காவிய அழகுணர்ச்சியே திருப்பு முனையில்தான் கருக்கொண்டு வளர்கிறது.**

---

இளங்கோவடிகள், பின் நிகழப் போகும் திருப்பத்திற்கு முன்னதாக முதற் காதையிலேயே அடையாளங்களைப் பதிவு செய்கிறார். திருமணத்தில் அமங்கலச் சொல்லிற்கு இடம் ஏது? இளங்கோவடிகள் அறியாதவரா? கோவலன் கண்ணகி திருமணம் காணவந்த பெண்கள் மணமக்களை வாழ்த்துகின்றார்கள். எப்படி?

''காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறுக''

''இவனோடு இணைந்து வாழ்க'' என்பதே மங்கல வழக்கு. ''கை கோர்த்து வாழ்க'' என்பதே வாழ்த்தும் முறை. ''நலம் சிறக்க வாழ்க'' என்பதே உலகியல். இளங்கோவடிகளோ, பிரியாமல் என்றும் ஞெகிழாமல் என்றும் தீதறுக என்றும் மங்கல மங்கையர் வாக்காக, எதிர்மறை வாழ்த்துக் கூறச் செய்கிறார். நுட்ப உணர்வு படைத்தார்க்குப் பின்வரும் காவியத் திருப்பத்திற்கு அடையாளம் காட்டும் கவித்திறம் இங்கே வெளிப்படக் காண்கிறோம்.



www.saivamonline.com

கோவலன் பிரிவு திட்டமிடப்பட்ட ஒன்றன்று; கண்ணகியின் பிழை ஏதும் அவன் பிரிவுக்குக் காரணமன்று. கோவலனோ காவியத் தலைவியின் மதிப்பிற்குரிய கணவன். மாதவியாவது மையல் செய்து கோவலனைப் பிரித்தாளா? இருந்தும் பிரிவு நேர்ந்து காப்பியத் திருப்பம் நிகழ்ந்து விடுகிறது. கவிஞனுக்கு மிகச் சிக்கலான இடம் இது. திருப்பத்தைப் பதிவு செய்வது மட்டும் அவன் கடமை அன்று. அதற்குக் காரணமானவரை இனங்காட்ட வேண்டும். விளைவுகளுக்கு விளக்கம் கூற வேண்டும். இளங்கோவடிகள் என்ன செய்கிறார்?

ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்ற காவியத்தின் முப்பெரும் பாவிகங்களுள் ஒன்றை இத்திருப்பத்திற்குக் காரணமாகக் கூறாது விடுகிறார்.

---

**நாம், காவியங்களைப் படைத்த அளவிற்கு, அவற்றை ஆய்ந்து இனங்கண்டு காப்பியக் கொள்கைகளை வகுத்தவர்கள் அல்லர். ஒரு மொழியின் காவிய இலக்கணத்தை, அம்மொழியின் முதற் காவியந் தொடங்கி வகுக்கத் தவறிய தொன்மொழியாளர்களுள் தமிழரும் அடங்குவர்.**

---

மாதவி குற்றமற்றவள் என்பதனை விளக்க அவள் இல்லத்தை மணமனை என்ற சொல்லால் காக்கிறார்.

கோவலன் வெறுத்துப் பிரிவதற்குக் காரணமான எந்தக் குறையும் கண்ணகிபால் இல்லை என்பதை உறுதி செய்ய வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் என்று கோடிட்டுக் காட்டுகின்றார்.

கோவலனையும் குறை சொல்ல விரும்பாதவராய் வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் துறந்து என்னாது, மறந்து என்ற சொல் பெய்து காக்கிறார்.

காவியப் போக்கில் நிகழ்ந்த இந்த முதல் திருப்புமுனைக்குக் காரணம் தேடவோ, கற்பிக்கவோ, சுட்டவோ இளங்கோவடிகள்



www.saivamonline.com

விரும்பவில்லை. கானல் வரி நிறைவில் கோவலன் பிரிவுக்கு ஊழைக் காரணம் காட்டும் இளங்கோவடிகள், இங்கே காரணம் கூறாமை ஒரு பண்பாடு கருதி என்பது நுண்ணுணர்வினர்க்குப் புலனாகவே செய்யும். நியமிப்பார் இல்லாது, ஆடவர் சமுதாயம் மேற்கொண்டு ஒழுகிய காம வாழ்க்கைக்குப் பூம்புகார் இடந்தந்து நின்ற அவலம் அறிந்த கவிஞர், அதனைச் சுட்டிக் காட்டிச் சோழர் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க விழைந்தாரல்லர். பாண்டியனையும், சேரனையும் பெயர் சுட்டிப் பேசும் கவிஞர், சோழன் இன்னான் எனக் குறியாதது இப்பண்பாடு கருதியதாகவே தோன்றுகின்றது.

காவியத்தில், தம் போக்கில் அமைந்த ஒரு திருப்பத்தைப் படைப்பதில் கவிஞர் காட்டும் எச்சரிக்கை உணர்ச்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

---

**தமிழ் இலக்கியங்கள் எவை? தமிழ்மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் எவை? என்ற வேறுபாட்டு உணர்ச்சியே தமிழ் ஆய்வாளர் பலரிடம் இல்லை. சிலப்பதிகாரமும், சிந்தாமணியும் தமிழ்க் காவியங்கள்தாம். ஐம்பெருங்காப்பியப் பட்டியலிலும் இவை இடம் பெறுகின்றன. ஆனால் இரண்டும் ஒன்றா?**

---

மாதவியோடு மனம் நிறைந்த வாழ்வினைப் பெற்ற கோவலன் பூம்புகார்க் கடற்கரையில் கானல்வரி பாடிப் பிரிவது சிலப்பதிகாரத்தில் அடுத்துவரும் பெரும் திருப்புமுனையாக அமைகிறது.

காவியப் போக்கில் அமையும் திருப்பு முனைகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

அயோத்தியில் தொடங்கி இராவணவதத்தில் நிறையும் இராமன் வாழ்வின் திருப்புமுனைகள் அவதார நோக்கத்தை எய்துவதற்கென்றே அமைகின்றன. இவை ஒரு நேர்ப்பயணத்தின் சாலைத் திருப்பங்கள் போல் அமைகின்றன.



www.saivamonline.com

இன்னொருவகைத் திருப்பங்கள் பலவும், மீண்டும், மீண்டும் ஒரு காவியக் கருவையோ, பாத்திரத்தையோ சுற்றிச் சுற்றி வருமாறு அமைவது. திருக்கோயில் தேரோட்டத்தில் நிகழும் ஒவ்வொரு திருப்பமும் கருவறையைச் சுற்றியே சுழல்வது போல்வது இது.

சிலப்பதிகாரத் திருப்பு முனைகள் இரண்டாம் வகையைச் சார்ந்தன. இங்கே ஒவ்வொரு திருப்பமும் கண்ணகியைச் சுற்றிச் சுற்றியே அமைகின்றது.

கடலாடு காதையிலேயே இரண்டாவது திருப்பத்திற்குக் கட்டியம் கூறுகிறார் இளங்கோவடிகள்.

"ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள
ஊடற் கோலமோ டிருந்தோன்"

---

**மாலை வாங்கி மாதவி பின்னால் கோவலன் போகின்றானே அங்கேதான் சிலம்பின் முதல் திருப்பம் அமைகிறது. ஒரு குடும்ப வாழ்க்கை காவியமாக அரும்பத் தொடங்குகின்றது. ஒரு குடும்பப் பெண் பத்தினியாக உயரத் தொடங்குகின்றாள். ஒரு செல்வன் கலைஞனாகின்றான்.**

---

உவக்குமாறு மாதவி, பெரிதும் அவனை மகிழ்விக்கப் பலவாறும் முயல்கிறாள். கழிக்கானல்கரையில் கோவலன் ஊடல் நீங்கி, "மாதவிதன் மனம்மகிழ வாசித்தல் தொடங்கும்" என்பதனால், அவன் அவளை மகிழ்விக்கவே கருதினான் என்பதையும் கவிஞர் சுட்டுகின்றார். பாடல் கேட்ட மாதவி மகிழாதவளாய் "மன்னும் ஓர் குறிப்புண்டு; இவன் தன்னிலை மயங்கினான்" எனக் கருதுகின்றாள். கலவியால் மகிழ்ந்தாற் போல் புலவியால் யாழ்வாங்குகின்றாள். தானும் ஒரு குறிப்பினள்போல் கானல்வரிப்பாடல் பாடத்தொடங்குகின்றாள். இவள் பாடப்போகும் பாடல்கள் கோவலனைச் சினம்மூட்டப் போகின்றன. அவன் பிரியப் போகிறான். காப்பியத்தின்



www.saivamonline.com

இரண்டாவது பெருந்திருப்பம் நிகழப் போகின்றது. இளங்கோவடிகள் பின் நிகழப் போகும் திருப்பத்திற்கு அவள் பாடல் தொடங்கும் முன்னரே ஒரு கட்டியம் கூறுகின்றார்.

''நிலத்தெய்வம் வியப் பெய்த நீள்நிலத்தோர் மனம்மகிழ''

எனப் பேசுகின்றார். இவள் பாடட்டும். பாடினால் கோவலன் சினப்பான்; சினந்தால் பிரிவு தலைப்படும். அதுவே காவியத் திருப்பு முனையாக அமையும். ஆனால், மாதவி அவ்வாறு பாடத் தொடங்கு முன்னரே இரு குறிப்பினை ஆசிரியர் இணைக்கிறார். ஒன்று நிலத் தெய்வத்தின் வியப்பு. இரண்டாவது ''நீள் நிலத்தோரின் மனமகிழ்ச்சி'' இவற்றை இளங்கோவடிகள் இங்கே ஏன் சுட்டுகின்றார்?

---

**நியமிப்பார் இல்லாது, ஆடவர் சமுதாயம் மேற்கொண்டு ஒழுகிய காம வாழ்க்கைக்குப் பூம்புகார் இடந்தந்து நின்ற அவலம் அறிந்த கவிஞர், அதனைச் சுட்டிக் காட்டிச் சோழர் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க விழைந்தாரல்லர். பாண்டியனையும், சேரனையும் பெயர் சுட்டிப் பேசும் கவிஞர், சோழன் இன்னான் எனக் குறியாதது இப்பண்பாடு கருதியதாகவே தோன்றுகிறது.**

---

ஏறத்தாழப் பதின்மூன்றாண்டுக்காலம் மாதவி கோவலனின் உரிமை மனைவியாகவே வாழ்ந்தாள். அவள் வயிற்றில் பிறந்த மகளுக்குத் தன் குல தெய்வத்தின் பெயரையே மணிமேகலை எனச் சூட்டும் அளவிற்கு மாதவியின் பண்பாடு சிறந்திருந்தது. மாதவியின் உயர் பேர் ஒழுக்கத்தை அங்கிருந்து கண்டு மகிழ்ந்தவன் நெய்தல் நிலத்தெய்வமாகிய வருணன், அவன் வியந்தானாம்! ஏன்?

கோவலனை மகிழ்விப்பதையே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த மாதவி, ஐயகோ, உட்குறிப்புப்படப்பாடி



www.saivamonline.com

வாழ்விழக்கப்போகிறாளே என்ற வருத்தத்தில், இவள்பால், இம்மாற்றம் எவ்வாறு அமைந்தது என்ற ஏக்கம் வருணன் பால் வியப்பாக விரிகிறது.

நீள்நிலத்தோர் மனம் மகிழ்ந்தார்கள். வியக்கத்தக்க இளங்கோவடிகளின் சமூகப் பார்வையின் மலர்ச்சியில் பூத்த தொடர் இது.

உலகவர்களுக்கு, மாதவி எத்தகையவள் என்பதில் கவலை இல்லை. கட்டிய மனைவியிடமிருந்து கோவலனைப் பிரித்தவள் இந்த மாதவி. இதோ உட்குறிப்புப்படக் கானல்வரிப் பாடப்போகிறாள். கோவலன் சினந்து மாதவியை வெறுத்துப் பிரியப் போகின்றான். அப்பிரிவு கண்ணகி கண்ணீருக்கு மருந்தாகப் போகிறது. கணவன், பிரிந்த மனைவியோடு சேர்வதையே விழைந்து போற்றும் சமூகத்திற்கு மாதவிபாடும் கானல்வரியின் பின் விளைவு குறித்த மகிழ்ச்சி மேலோங்கி நிற்கிறது.

---

**காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் நடக்கும்போது, அதற்குத் தமிழர்கள் கண்ட சமாதானமே ஊழ்.**

---

இளங்கோவடிகள் அற்புதம் படைத்த நுட்பமான இடம் இது.

உலகவர் போல மாதவியை வெறுத்தொதுக்கிக் குற்றவாளி எனக்கூற இளங்கோவடிகளின் நெஞ்சம் ஒப்பவில்லை.

காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் நடக்கும்போது, அதற்குத் தமிழர்கள் கண்ட சமாதானமே ஊழ்.

மாதவியின் தன்மைக்கு மாறான அவள் பண்புகளோடு முரணி இக்கானல்வரிப் பாடல்களுக்கு அவளைக் குற்றவாளியெனப் பொறுப்பாக்க ஆசிரியருக்கு நெஞ்சம் இல்லை.

''யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந்து உருத்ததாகலின்'' என ஊழைக் காரணம் காட்டிக் காவியத் திருப்பத்தை இளங்கோவடிகள் நடத்திச் செல்கிறார்.



www.saivamonline.com

கோவலன் கொலையில் காவியம் ஒருமுறை குலுங்கித் திரும்புகின்றது.

கண்ணகி காற்சிலம்பிலிருந்து மாணிக்கக் கற்கள் புறப்பட்டு மன்னவன் வாய்முதல் தெறித்த போது உச்சக்கட்டக் காப்பியத் திருப்பம் அமைந்து கதை நிறைகிறது.

நிறைவான வழக்குரை காதைத் திருப்புமுனை, கண்ணகி உடைத்த அவள் காற்சிலம்பிலிருந்து மன்னவன் சற்றும் எதிர்பாராத மாணிக்கக்கற்கள் தெறித்தெழுவதே ஆகும், என்றாலும், இத்திருப்பத்தை அமைப்பதிலே ஓர் இடர்ப்பாடும் அமைகிறது.

---

**காவியத் திருப்பு முனைகளுக்குக் காரணம் காட்டி, விளைவுகளை விளக்குவதில் கம்பன் பெற்ற வெற்றியைத் தமிழ் இலக்கியத்தில் வேறு எவரும் பெற்றிலர்.**

---

''நீர்வார்கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடியோய்''.

இது பாண்டியன் நெடுஞ்செழியன் தொடுத்த வினா.

''தேரா மன்னா செப்புவது உடையேன்...''

என்றுத் தொடங்கி, சோணாட்டுச் சிறப்பு; மாமனின் பெருமை, கணவர் பெயர், அவன் கொலையுண்டமை யாவும் கூறி,

''கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயரே...''

எனக் கண்ணகி விடை தருகிறாள். யார்? என்ற மன்னன் வினாவிற்குக் கண்ணகி என விடை அமைவது நேராகவே அமைகிறது.

இரண்டாவதாகப் பாண்டியன், கோவலன் கள்வன் என அறிந்தவகையில்,

''கள்வனைக் கோறல்'' கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றம் காண்''



www.saivamonline.com

எனத்தன்னிலை விளக்கம் அளித்து, நின் கணவன் கள்வனல்லானோ என்ற குறிப்பைப் பெய்கின்றான்.

இங்கேதான் காப்பியத்தின் பெருந்திருப்பத்தை அமைக்க வேண்டிய கட்டாயம் இளங்கோவடிகளுக்கு அமைகிறது.

பாண்டியன் கள்வனைக் கொன்றது செங்கோன்மையே என்றதும், கண்ணகிக்கு அடுத்துப் பேசச் செய்தித் தொடர்ச்சி இல்லாது போகிறது. என் கணவன் கள்வன் அல்லன் என்று வேண்டுமானால் அவள் கூறியிருக்கலாம். ஆனால், அவளோ வினாவப்படாத வினா ஒன்றற்கு விடை பகர்ந்து புதுமை செய்கிறாள்.

---

**அயோத்தியா காண்டத்தில் வாசகர்கள் நிற்கும் போதே, கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தான் வாழும் காலத்தில் இராமன் புகழ் பரந்து விரிந்து கிடப்பதால் பெருமிதமுற்று, பின் விளைவின் பெருமிதத்தால் முன் நிகழ்வுக்குச் சமாதானம் கூறுகின்றான். இது ஒரு கவித்துவப் பெருமிதம். கவிஞர்களுக்கே உரிய உரிமைத் தடம். இதை அவர்கள் உரிய நேரத்தில் உரியவாறு பயன் கொள்வர்.**

---

உன் காற்சிலம்பின் உள்ளீட்டுப்பரல் முத்தா? மணியா? எனப் பாண்டியன் வினவவில்லை.
கண்ணகியோ,

''நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே''

என்று புதுத்தடம் பேசுகின்றாள். மன்னன் இசைகிறான். சிலம்பு முன்வைக்கப் படுகிறது. உடைக்கிறாள். மணி தெறிக்கிறது. மன்னன் மாள்கிறான். கதை நீள்கிறது.

இந்தத் திருப்பத்தை வினாவப்படாத நேரத்தில் விடையாக்கிப் புதுமை செய்கிறார் இளங்கோவடிகள்.



www.saivamonline.com

கண்ணகியின் அடக்கமும், கற்பும் பேசிய இளங்கோவடிகள் அளவற்ற துயரத்திலும் அறிவுத்திறம் மாறாத அவள் பேரியல்பை நிறைவாக நிலைநாட்ட இவ்வுத்தியைக் கையாள்கிறார். அறிவார்ந்த வணிகர் குலப்பெண்ணிற்கு அணிகலன் அழகும் உள்ளீடும் நன்கு தெரிந்தவை. ''கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று'' என்றதும் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிறுவிக்காட்ட, பாண்டிய நாட்டு முத்துச்சிறப்பை அறிந்திருந்த கண்ணகி, சிலம்பின் உள்ளீட்டுப் பராலாலேயே இதனை நிறுவ இயலும் என ஒரு நொடிப் பொழுதில் முடிவுக்கு வருகிறாள். அதுபற்றியே, '' நற்றிறம் படராக் கொற்கை வேந்தே'' என

---

**திருப்புமுனைகளால் காவியச் சுவை கூடுகிறது. தேங்கிக் கிடக்கும் கதை நடை போடத் தொடங்குகிறது. குறிக்கோளை எய்தத் திருப்பம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. இந்தத் திருப்பத்தை அமைக்கும் பொழுது கூடக் கவிஞன், தொடர்புடைய பாத்திரங்களை இனங்கண்டு போற்றவும், தூற்றவும் வேண்டியுள்ளது. உலகியல் உணர்ந்து உளவியல் பின்னணியில் விளைவுகளை இனங்காட்டிச் சமாதானமும் செய்ய வேண்டி வருகிறது.**

---

முத்துக்குப் பெயர்போன கொற்கை நகரின் பெயரால் மதுரைப் பாண்டியனை அழைக்கிறாள். கதை தொடர்கிறது. திருப்பம் காப்பிய நிறைவிற்குப் பேரழகாகிச் சிறக்கிறது.

காப்பியங்களில் திருப்பு முனைகள் அமைப்பதில் கவிஞனுக்கு உள்ள மாபெரும் பொறுப்புக்களைச் சிலப்பதிகாரம் நிறைவாகவே எடுத்துக்காட்டுகின்றது. குடும்ப வாழ்வில் நிகழ்ந்த திருப்பங்களைச் சிலப்பதிகாரம் பேசினால், அரசியல் வாழ்வில் நிகழ்ந்த திருப்பங்களை இராமகாதை அழகுற விரிக்கின்றது. தாமே படைக்கும் காவியங்களில் திருப்பு முனைகளை அமைப்பது கவிஞனுக்குச் சற்று எளியது. முன்னரே வழங்கிவரும் கதையைத்



www.saivamonline.com

தாய்மொழியில் புனைவோர்க்குத் திருப்புமுனைகளை அமைத்துக் கதை நடத்துவதில் இடர்ப்பாடுகள் ஏராளம்; இராமாயணமும், மகாபாரதமும் இந்திய நாடு தழுவி , நன்கு அறிமுகமான பேரிதிகாசங்கள். இவற்றின் கதைப் போக்கு முன்னரே அறியப்பட்டது; அமைந்துகிடப்பது. சிறு மாற்றங்களைத் தவிர மூலக்கதைப் போக்கில் பெரிய மாற்றங்களைக் கவிஞன் செய்ய வாய்ப்பில்லை. காவியத்தின் திருப்பு முனைகளில் பெரியனவும் உண்டு; சிறியனவும் உண்டு.

இராமகாதைத் திருப்பு முனைகளுள் பெரிது கைகேயி மனமாற்றம். கவிச்சக்கரவர்த்திக் கம்பன் இந்தக் காவியத்தில் திருப்புமுனையைக் கையாளும் அழகு ஈடு இணையற்ற பெருஞ்சிறப்புக்குரியது. கல் சிற்பத்தில், மயிர்க்காம்புகள் செதுக்கும் நுட்பம் போன்றது. காப்பியத் தலைவன் இராமன்; அவன் உயர் பண்புகளின் உறைவிடம். இராமன் மேல் உயிரையே

---

**காவியங்களில் திருப்புமுனை அமையும் போது, எல்லாம் கீழ் மேலாய், மேல் கீழாய் நிகழ்ந்து முடியும். விதியே முன்னின்று நிகழ்த்தும். விதிக்கு விதியாவேன் என்னும் இலக்குவனே " வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ" என்று பேசுமளவுக்குத் திருப்பங்கள் அடுத்தடுத்து விரைந்து நிகழ்ந்து முடிகின்றன.**

---

வைத்திருக்கும் தயரதன் வாய்மைக்கு ஒருவன். இராமனை வளர்த்து ஆளாக்கியவளோ அரசரில் பிறந்து, அரசரில் புகுந்த தெய்வக்கற்பினளாகிய கைகேயி.

நாளை காலை நடைபெற வேண்டிய முடிசூட்டு விழா, முதல்நாள் இரவில் தடுத்து நிறுத்தப்படுகிறது. திட்டமிட்டவள் மந்தரை. மனம் மாறி வரம் வேண்டியவள் கைகேயி. வரம் வழங்கியவன் தயரதன். பாதிக்கப்பட்டவன் இராமன். காவியத் திருப்பமும் நிகழ்ந்தாக வேண்டும். உயரிய இப்பாத்திரங்களுக்கும் களங்கம் வாராது காத்தல் வேண்டும். இவை எங்ஙனம்



www.saivamonline.com

சாத்தியமாகும்? இங்கேதான் கம்பச் சித்திரப் பேரழகினைத் தரிசிக்க முடிகிறது.

இராமனை வளர்த்த கைகேயி சூழ்வினையால் இராமன் காடேகும் முதல் திருப்புமுனை அமைகிறது. தீய சூர்ப்பணகை வரவால், சீதை இராமனிடமிருந்து பிரிக்கப்படும் இரண்டாவது பெரிய திருப்புமுனை ஆரணிய காண்டத்தில் அமைகிறது. இரண்டு திருப்புமுனைகளையும் கம்பன் கையாளும் திறம் வியப்பூட்டி நிறைவிக்கிறது.

இராமன் நாளையே பூமகள் கொழுநனாய், புனையும் மௌலி, இக்கோ நகர் அணிக என வள்ளுவன் இராமபிரானின் பட்டாபிடேகச் செய்தியை நகரவர்களுக்கு அறிவிக்கிறான். தடையேதும் இன்றி மறுநாளே இராமன் முடிசூடியிருந்தால் இராமகாதை அயோத்தியோடு நிறைந்திருக்கும். கதையின்

---

**நல்மனக் கைகேயி விளைத்த திருப்பத்தை நியாயப்படுத்திப் பேசும் கவிச் சக்கரவர்த்தி, சூர்ப்பணகை விளைத்த திருப்பத்தை விதிவழி என ஏற்கின்றான். தீயவர் தீமை புரியும்போது அதிலே ஆராய ஏதும் இல்லை. நல்லார் தீமை புரிந்தாலோ அல்லது தீயர் நன்மை விளைத்தாலோ அங்கேதான் கவிஞன் நின்று சிந்திக்கத் தொடங்குகின்றான்.**

---

மிகப்பெரிய திருப்பத்திற்கு மிகச்சிறிய கூனியாகிய மந்தரையின் இடையீடு காரணமாகிறது. காவியத்தின் முதல் வரவாகக் கூனி தோன்றும் முதல் காட்சியிலேயே கம்பன் அவள் வருகையை,

''இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்''

எனக் கூறுகிறான். கூனியின் வருகை, கைகேயி மனமாற்றம்,தயரதன் வரம், இராமன் காடேகல், சீதை பிரிக்கப்படல், இராமன் இலங்கை சேரல், இராவண வதம் எனப்பின் நீளப்போகும் கதை முழுவதையும் உட்கொண்ட கம்பன், கூனியின் வருகையின்போதே அவள் தோற்றம், இராவணன் இழைத்த தீமைகள் ஓர் உருக்கொண்டது போல்



www.saivamonline.com

அமைந்துள்ளது என்று விடுகதை போல், மாபெரும் வரப்போகும் திருப்புமுனையின் உண்மைவிளைவை முன்னதாகவே அறிவிக்கத் துணிகிறான். நடந்து முடிந்த செயல் ஒன்றிற்கு மூலகாரணம் கூறுவது காவியமரபு என்பதைச் சிலம்பில் காண்கிறோம். மாடல மாறையோன், கனகவிசயர் தலை கல் சுமக்கக் காரணம், மாதவியின் கானல்வரிப் பாடல்களே எனப் பேசும் போது, ஒன்றால் ஒன்று நிகழ்ந்தேறியதென உணர முடிகிறது. இங்கோ, பின் கதை இதுவரை பயில்வார் அறியாதிருக்கும் போதே, இராவணன் இழைத்த தீமை ஓர் உருக்கொண்டது போல் கூனி தோன்றினாள் எனக் காவிய முடிவிற்கு முன் அடையாளம் காட்டுகின்றான் கவிச் சக்கரவர்த்தி.

---

**காப்பியக் கவிஞன் உலகியல் அறிந்தவன். உயர் பண்புகளின் நிலைக்களனாகத் திகழ்பவன். கதை நடத்துவதே அவன் நோக்கமானால் திடீர் திருப்பங்களை எங்கெங்கும் அவனால் அமைக்க முடியும். கதைத்தேரின் சக்கரங்களாகவே காவியங்களில் திருப்புமுனைகள் அமைகின்றன. சக்கரங்களை உரிய இடங்களில் மட்டுமே பொருத்த முடியும். அவ்வாறு பொருத்தாக்கால் காவியத்தேர் நிலைகுலைந்து நின்று விழும்.**

---

இங்கே ஓர் அரிய நுட்பம் உண்டு. மனம் மாறி வரங்கேட்டு, இராமனைக் காட்டுக்கு அனுப்பியவள் கைகேயியே. காப்பியத் திருப்பத்திற்குக் காரணமானவள் கைகேயி என்றாலும், இராமன் காடேகியதற்கு அவளைக் காரணமாக்கி விடக் கூடாது என்ற கம்பனின் பாதுகாப்பு உணர்ச்சி, கூனியை ஆளாக்கி இடைப்புகுத்தி விடுகதை போல் அவளை அறிமுகப்படுத்தத்தூண்டுகின்றது. உறங்கிக் கிடந்த கைகேயியைக் கூனி, அவள் செம்பொன் சீறடி தொட்டு எழுப்புகின்றாள். கவிச்சக்கரவர்த்தி, ''சீறடி கைகளின் தீண்டினாள் காலக்கோள் அனாள்'' எனப் பேசுகின்றான். தொட்டாள், வருடினாள், உசுப்பினாள், அசைத்தாள் என இவற்றுள் ஒன்று பெய்யாது,



www.saivamonline.com

தீண்டினாள் என்ற சொல் பெய்த கம்பன், கூனியாகிய நச்சுப் பாம்பு, தன்னிடம் உள்ள விடத்தைக் கைகேயிபால் செலுத்தி, அவளையும் நஞ்சாக மாற்றுகின்றது எனக் குறிப்பால் காப்பியம் நடத்துகின்றான்.

கூனி எழுப்ப, கைகேயி கண் விழிக்கிறாள். கம்பன் இதனைக் கூற வருகிறான். ''தீண்டலும் உணர்ந்த அத்தெய்வக் கற்பினாள்'' எனக்கண் விழித்தாளைத் தெய்வக் கற்பினாள் எனப் பாராட்டிக் கதை தொடர்கிறான். கைகேயி குறையுடையவள் என்றோ, அவள் எண்ணிச் செய்தே இராமனைக் காட்டுக்கு அனுப்பினாள் என்றோ, அவள் கற்புக் குறைபாடு உடையவள் என்றோ கற்பார் நினைத்துவிடலாகாது என்ற கவிஞன் உள்ளம், கண் விழித்தாளைத் தெய்வக் கற்பினாள் எனப் பாராட்டிப் போற்ற வைக்கிறது.

---

**இளங்கோவும், சாத்தனாரும், திருத்தக்கத்தேவரும், கொங்கு வேளிரும், கம்பரும், கச்சியப்பரும், வில்லியும், காவியத் திருப்பு முனைகள் அமைத்து மாபெரும் வெற்றி கண்டவர்கள். தனித்தனி வரலாறுகளின் தொகுப்பாயினும் சேக்கிழாரும் சுந்தரர் வரலாற்றில் தடுத்தாட்கொள்ளும் திருப்பத்தை அழகொழுகவே படைத்துக் காட்டுகின்றார்.**

---

நாம் சிறிது எனக் கருதாது செய்த தீமை எங்ஙனம் பேருருக் கொள்ளும் என்பதனையும், சிறியர் என எவரையும் இகழ்தல் செய்யற்க என்பதையும் நீதிகளாகக் கம்பன் பெய்கின்றான். கூனி ''பண்டைநாள் இராகவன் பாணிவில் உமிழ் உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்''. அன்று இராமன் பிள்ளைப்பிராயத்தில், தன்கை அம்பில், மண் உருண்டை வைத்துக் கூனி என்னும் மந்தரைக் கூன் முதுகில் அடித்தான். அவள் நெஞ்சம் கருக்கொண்டது. அன்று மண்ணால் அடித்தான். இன்று அந்த மண்ணே இவனுக்குக் கிடைக்காமல் செய்கிறேன் என்று கறுவும்



www.saivamonline.com

கூனியின் பழிவாங்கும் உணர்ச்சியே காப்பியத் திருப்பத்தின் முதல் காரணம் என்பது அடையாளம் காட்டப்படுகிறது.

வஞ்சித் தொழுகுவாரும், தீயர்களும் சிறு பிழைகளைக் கூடப் பெரிது படுத்தித் தவறுக்கு மீறிய தண்டனை வழங்கத் துணிவர் என்பதைப் பாஞ்சாலியின் சிரிப்புக்காக அவளைத் துகில் உரிய வைத்த துரியோதனன் வஞ்சத்திலும் கூனியின் கொடுமையிலும் இனங்காண முடிகிறது. கூனி அடிமேல் அடி அடிக்கிறாள். தளராது நின்று மகிழ்ந்திருந்த கைகேயி நெஞ்சம் சிறிது சிறிதாக மாறத் தொடங்குகின்றது. இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ என இராமனைப் பெற்ற அன்னையாகவே கருதி மகிழ்ந்திருந்தவள், கூனி வஞ்சத்திற்குப் பிறகு என் மகன் எனப் பரதனை எண்ணத் தொடங்குகின்றாள். அடிமனத்தில் மெள்ளமெள்ள ஏற்பட்ட மாற்றம் கைகேயியின் உறுதியைக்

---

**காப்பியத் திருப்புமுனைகளுக்குக் காரணங்காட்டி, நியாயப்படுத்தும் உரிமை கவிஞனுக்கு உண்டா? எல்லாத் திருப்புமுனைகளிலும் கவிஞன் நடுநிலைமையோடு காரணங்களை ஆராய்ந்து நியாயப்படுத்தியுள்ளானா?**

---

குலைக்கிறது. அவள் மனம் மாறுகிறாள். காவியத்தின் முதல் திருப்புமுனை வலுப்பெறுகிறது. கவிச்சக்கரவர்த்தி,

> ''தீயமந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
> தூய சிந்தையும் திரிந்தது....''

எனக் கைகேயியின் மன மாற்றத்தைப் பதிவு செய்கிறான். இங்கேயும் கைகேயியைத் தேவி என்றும், அவள் மனத்தால் தூயள் என்பதைத் தூய சிந்தையும் என்றும் பதிவு செய்து காட்டுகின்றான்.

காவியத் திருப்பு முனைகளுக்குக் காரணம் காட்டி, விளைவுகளை விளக்குவதில் கம்பன் பெற்ற வெற்றியைத் தமிழ் இலக்கியத்தில் வேறு எவரும் பெற்றிலர்.

கைகேயி மனமாற்றத்தின் நேரடி விளைவு இராமன் காடு ஏகுவதுதான். ஆயின் இங்கேயும் கம்பன் அதனைக்



www.saivamonline.com

குறிக்கவில்லை. தேவி தூய சிந்தையும் திரிந்தது. எதற்காக? ''சூழ்ச்சியின் இமையோர் மாயையும், அவர் பெற்ற நல்வரம் உண்மையானும், ஆய அந்தணர் இயற்றிய அருந் தவத்தானும்'' என்கிறான். கைகேயி மனமாற்றம் கூனியால் நிகழ்ந்ததே. கவிஞனோ, இம்மாற்றத்திற்குத் தேவர்களின் மாயையையும் அவர் பெற்ற வரபலத்தையும், அந்தணர் அருந்தவத்தையும் காரணங்களாகக் கற்பிக்கின்றான். நல்லார் ஒருவரின் மனமாற்றத்தால் விளைந்த தீமைகளைப் பட்டியல் இடாது, விளையப் போகும் நன்மைகளை இனங்காட்டுவது தெய்வமாக் கவிஞர்களின் பண்பாட்டுக்குச் சான்று கூறுகின்றது. இராமன் காடு ஏகாதிருந்தால் தேவர்களும், முனிவர்களும் வாழ்வு பெற்றிருக்க இயலாது. எனவே, தெய்வக் கற்பினாளின் மன மாற்றத்திற்கு நேரடிக் காரணம் கூனிபோல் தோன்றினாலும், மறைமுகக் காரணங்களும் வேறு சில உண்டு என்பதைக் கவிஞன் இனங்காட்டிப் பாத்திரத்தின் மேல் படிப்பார் கொள்ளும் சினத்தைத் தணிக்க முயல்கிறான்.

---

**மேலை கீழை நாடுகளின் இலக்கியத் திருப்பங்களோடு, தமிழ்க் காவியத் திருப்பங்களை ஒப்பிட இயலுமா? இயன்றால், தமிழ்க் கவிஞர்களின் நிலை என்ன? காப்பியத் திருப்புமுனைகளைத் தனி ஓர் இலக்கிய உத்தியாக வளர்த்து இலக்கணம் காண முடியுமா?**

---

சிந்தை திரிந்த கைகேயி கூனி சொல்வழி நின்று இருவரம் கேட்கத் துணிந்து விடுகிறாள். அவள் நல்லருள் துறக்கிறாள்;இரக்கமின்மை அவள் உள்ளத்துள் நிறைகிறது. இதுவரை, கூனி வருகையிலும் சரி, கைகேயி மன மாற்றத்திலும் சரி, இராமனைப் பற்றியே குறிக்காத கவிஞன், முதன் முதலாக இங்கேதான் இராமனைக் குறிக்கிறான். அப்போது கூட இராமன் துயர் உற்றான் என்றோ, உறுவான் என்றோ கூறாது, பின் விளையப் போவதனைப் பெருமிதத்தோடு பேசுகின்றான். ஒருபக்கம் தேவரும், முனிவரும் இயற்றிய அறங்கள் கைகேயி மனம் மாறக் காரணங்கள் என்கிறான். அடுத்தப் பாடலிலேயே,



www.saivamonline.com

''அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்''

எனப் பேசுகின்றான். தீமையின் வீழ்ச்சி ஒரு பக்கம், நன்மையின் வாழ்க்கை ஒரு பக்கம்; இரண்டும் வெற்றி பெறுகிறது. கைகேயி மனம் மாறுகின்றாள்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் காவியத்தின் இத்திருப்பம் எவ்வளவு இன்றியமையாதது என்பதனைக் கவிஞன் தன் கூற்றாகவே பதிவு செய்து காட்டுகின்றான். கைகேயி இராமன்பால் இரங்கி, கூனி சொல் கேளாது, மனம் மாறாதிருந்தால், இராமனை உலகம் எங்கே அறிந்திருக்கப் போகிறது. இரக்கத்தை வீசி எறிந்து, நெஞ்சுள் அரக்கத் தன்மையை அவள் அன்று வரித்திராவிட்டால் இராமாவதாரமே நிறைந்திருக்காது. கம்பன் காப்பியப் பண்பைப் பதிவு செய்கின்றான்.

''இரக்கம் இன்மை அன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே''.

என்று பாராட்டிப் பெருமிதம் கொள்கிறது கவிதை நெஞ்சம். காவியம் பயில்வோர் கதை நிகழ்வின் மேலேயே நின்று கற்கின்றனர். அவர்களுக்குக் காப்பிய முடிவு தெரியாது. ஆனால், கதை நடத்துகின்ற கவிஞன் முடிவினை அறிந்தே கதை நடத்துகின்றான். அயோத்தியா காண்டத்தில் வாசகர்கள் நிற்கும் போதே, கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் தான் வாழும் காலத்தில் இராமன் புகழ் பரந்து விரிந்து கிடப்பதால் பெருமிதமுற்று, பின் விளைவின் பெருமிதத்தால் முன் நிகழ்வுக்குச் சமாதானம் கூறுகின்றான். இது ஒரு கவித்துவப் பெருமிதம். கவிஞர்களுக்கே உரிய உரிமைத் தடம். இதை அவர்கள் உரிய நேரத்தில் உரியவாறு பயன் கொள்வர். ஒரு தீமையிலிருந்து முடிவாக ஒரு நன்மை விளையுமானால், அந்தத் தீமையைக் கூட நன்மையாக ஏற்றுப் போற்றலாம் என்று, காவியம் சார்ந்த உலகியலை இத்திருப்புமுனையில் கவிச்சக்கரவர்த்திப் படிப்பினையாகப் புகட்டுகின்றான்.

பின்னிருந்து, முன்நிகழ்வைக் கணித்து, ஆத்திரப்படாது, கைகேயி மனம்மாறிய போதிலும் கூடத் தூமொழி மடமான் எனப்



www.saivamonline.com

போற்றிய கம்பன், மீண்டும் காவிய உணர்விலிருந்து விடுபட்டுக்கதை நடத்தத் தொடங்கிய போது, ஏசத் தலைப்படுகின்றான். அவள் மங்கலத்தைக் குலைத்துக் கொண்டு கிடக்கும் போது, இது குலமகளுக்குத் தகாதே என்று அவளை மூதேவிபோல் கிடந்தாள் எனப் பேசுகின்றான். இருவரங்கேட்டு நின்ற போது, ''தீயவை யாவையினும் சிறந்த தீயாள்'' எனச் சினத்தில் வளர்ந்து பேசுகின்றான். கணவன் பலபட வேண்டவும் கைகேயி இரங்காமை கண்டு சினத்தின் உச்சிக்கே போகும் கவிஞன், கைகேயியை மட்டும் ஏசாமல் பெண்மையையே பழித்துரைக்கிறான்.

> ''வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றே
> நஞ்சுஎன மாதரை உள்ளலார்கள் தக்கோர்''.

என, பின்னர் மண்டோதரியையும், தாரையையும், சீதையையும் கற்பரசிகளாகக் காட்ட வேண்டிய கடமை இருப்பதையும் மறந்து ''பெண்மையே வஞ்சனையின் மறு வடிவம்'' என மனம் கொதிக்கிறான். கணவன் சாக்காட்டுக்கே காரணமாகிறாள் என்று ஆத்திரம் வரும்போது, எவ்வளவு நியாயங்கள் கற்பித்தாலும், கணவன் சாக்காட்டிற்குக் காரணமாக மனைவி இருந்தாள் என்பதை ஏற்க மறுக்கும் கவிஞன்,

> ''கேகயத்து அரசன்பயந்த விடத்தை இன்னது ஓர் கேடு சூழ்
> மாகயத்தியை உள்கொதித்து மனத்து வைவன போன்றவே''

எனப் புட்கள் சிலம்புவதற்குக் காரணம் கற்பிக்குமிடத்துக் கைகேயியை ''மா கயத்தி'' என்று கடுமையாகச் சாடுகின்றான். கயவன் என்ற ஆண்பாலுக்குக் கயத்தி என்ற பெண்பாற் சொல்லை வழி மொழிந்து, கயமை மிகுதி தோன்ற ''மா'' என்ற மிகுதிச் சொல் சேர்த்து விடுகின்றான்.

காவியங்களில் திருப்புமுனைகள் ஏனோ தானோ என்று அமைந்து விடுவதும் இல்லை; கவிஞர்களால் அமைக்கப்படுவதும் இல்லை.

கதை நடத்துவது மட்டும் கவிஞனின் குறிக்கோளாக இருக்குமானால், அங்கே காவியப் பண்புகளைத் தேட இயலாது.



www.saivamonline.com

திருப்பு முனைகளால் காவியச் சுவை கூடுகிறது. தேங்கிக் கிடக்கும் கதை நடை போடத் தொடங்குகிறது. குறிக்கோளை எய்தத் திருப்பம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. இந்தத் திருப்பத்தை அமைக்கும் பொழுது கூடக் கவிஞன், தொடர்புடைய பாத்திரங்களை இனங்கண்டு போற்றவும், தூற்றவும் வேண்டியுள்ளது. உலகியல் உணர்ந்து, உளவியல் பின்னணியில் விளைவுகளை இனங்காட்டிச் சமாதானமும் செய்ய வேண்டி வருகிறது.

காப்பியப் போக்கிலும் நோக்கிலும் கைகேயி செயலை நியாயப்படுத்திக் கம்பனால் கதை நடத்த முடிகிறது. ஆனால், கணவனின் சாவுக்கே மனைவி காரணமானாள் என்கிறபோது உலகியல் நோக்கில் சமூகம் அதனை ஏற்காது என அறிந்து, உலகினருள் ஒருவனாக நின்று கைகேயியைக் கவிஞன் ஏசவும் வேண்டி வருகிறது. இங்கே எல்லாம் ஒருவன் வெற்றி பெற்று விட்டால் அவன் தெய்வமாக் கவியாகவே உலகவரால் போற்றப் பெறுகின்றான்.

கைகேயி விளைத்த காவியத் திருப்பு முனைக்குப்பின் ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகள் காவியத்தின் கதைப் போக்குத் தொய்ந்து விடுகிறது. இராமனின் காட்டு வாழ்வில் சுவையான காப்பிய நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை. ஆரணிய காண்டத்தின் பெரும் பகுதி சுவை குன்றி நடப்பதற்குக் காரணம் உரிய அடுத்த திருப்பம் ஆங்கே நிகழாமையே. விழுந்து கிடந்த காவியப் போக்கிற்குப் பெரும் சுவை கூட்ட வரும் இரண்டாவது பெரிய திருப்புமுனை இராவணன் தங்கை சூர்ப்பணகை வழியே அமைகிறது. இங்கேயும் கவிச்சக்கரவர்த்திக் கொடி கட்டிப் பறக்கின்றான். மிகப் பெரிய திருப்பு முனையாக இராவண வதம் என்ற காவிய நோக்கிற்குச் சூர்ப்பணகை வரவும், அவள் விளைத்த திருப்பமுமே காரணங்களாகின்றன.

கம்பன் சூர்ப்பணகையை முதன் முதல் அறிமுகப்படுத்தும் போதே இராவணனையும், அவன் குலத்தையும் ஒரு சேர அழிக்கும் வலியுடையாள் இவள் என்றே பேசத் தொடங்குகின்றான். உயிரொடு பிறந்து மறைந்து வாழ்ந்திருந்து, தக்க நேரத்தில் உடலை



www.saivamonline.com

வீழ்த்தும் கொடிய நோய் போன்றவள் அவள் என்றும் கவிஞன் அறிமுகம் செய்கிறான்.

''நீலமாமணி நிற நிருதர் வேந்தனை
மூல நாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்
மேலை நாள் உயிரொடும் பிறந்து, தான் விளை
காலம் ஓர்ந்து உடன் உறை கடிய நோய் அனாள்''

சூர்ப்பணகை வரவும், அவள் இராமனைக் காண்பதும், காதல் கொண்டு உரைத்தலும், தன்னியல்பிற்கு மாறாக இராமன் அவளொடு உரையாடலும், பின் நிகழ்வுகளும், அவள் ஏற்றிய காமத்தீயால் இராவணன் நிலை தடுமாறுதலும் அடுத்தடுத்து விரைவில் நிகழ்கின்றன. சீதை இராமனிடமிருந்து பிரிக்கப்படும் சூழல் அமைகிறது. மாயமானைக் கண்டு விழைவேதும் இல்லாச் சீதை விழைவு கொள்கிறாள். தெளிந்த அறிஞனாகிய இராமன் அதனைப் பிறழ உணர்கிறான். பதற்றம் நிறைந்த இலக்குவன் தெளிவோடு நிற்கின்றான். மாரீசன் மாயக்குரல் கேட்டு இலக்குவனைச் செல்லுமாறு பணிக்கிறாள் சீதை. அவன் பலபட மறுத்தும் அவள் உடன்பட மறுக்கிறாள். இறுதியில் இலக்குவன், சாவேன் என்ற சீதையை நோக்கி,

''துஞ்சுவது என்னை? நீர் சொன்ன சொல்லையான்
அஞ்சுவென்; மறுக்கிலன்; அவலம் தீர்ந்து இனி
இஞ்சிரும்; அடியனேன் ஏகுகின்றனன்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ?''

என்று கூறிப் பிரிகிறான். காவியங்களில் திருப்புமுனை அமையும் போது, எல்லாம் கீழ் மேலாய், மேல் கீழாய் நிகழ்ந்து முடியும். விதியே முன்னின்று நிகழ்த்தும். விதிக்கு விதியாவேன் என்னும் இலக்குவனே ''வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ'' என்று பேசுமளவுக்குத் திருப்பங்கள் அடுத்தடுத்து விரைந்து நிகழ்ந்து முடிகின்றன. சீதைச் சிறைப்படுத்தப்படுகிறாள். சடாயு உயிர் துறக்கிறார். சினங்கொண்ட இராமனை நோக்கிச் சடாயு,

''கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பு இழை வரிவில் செங்கை ஐயன்மிர் ஆயும் காலை



www.saivamonline.com

உம்பிழை என்பதல்லால் உலகம் செய்பிழையும் உண்டோ?'' என அறிவு கொளுத்துகின்றார்.

நன்மனக் கைகேயி விளைத்த திருப்பத்தை நியாயப்படுத்திப் பேசும் கவிச்சக்கரவர்த்தி, சூர்ப்பணகை விளைத்த திருப்பத்தை விதிவழி என ஏற்கின்றான். தீமை தீயவர் புரியும்போது அதிலே ஆராய ஏதும் இல்லை. நல்லார் தீமை புரிந்தாலோ, அல்லது தீயர் நன்மை விளைத்தாலோ அங்கேதான் கவிஞன் நின்று சிந்திக்கத் தொடங்குகின்றான்.

காப்பியக் கவிஞன் உலகியல் அறிந்தவன். உயர் பண்புகளின் நிலைக்களனாகத் திகழ்பவன். கதை நடத்துவதே அவன் நோக்கமானால் தீடீர்த் திருப்பங்களை எங்கெங்கும் அவனால் அமைக்க முடியும். கதைத்தேரின் சக்கரங்களாகவே காவியங்களில் திருப்புமுனைகள் அமைகின்றன. சக்கரங்களை உரிய இடங்களில் மட்டுமே பொருத்த முடியும். அவ்வாறு பொருத்தாக்கால் காவியத்தேர் நிலைகுலைந்து நின்று விடும்.

புதிதாகக் கற்பனைக் காவியம் புனைவோர் திருப்பங்களைத் தன்னிச்சையாக அமைக்கலாம். வரலாற்று நிகழ்வுகள் மீதும், நாடறிந்த இதிகாசங்கள் மீதும் கவிஞன் தன்னிச்சையாகத் திருப்பம் அமைத்தல் இயலாது. முன்னரே அமைந்து கிடப்பனவற்றைத் தன் கவிதைச் சிறப்பால் அவன் அழகூட்டமட்டுமே இயலும். அவ்வாறான நிலைக்களங்களில்தான் கவிஞனின் மனப்பண்பினையும், புனை திறத்தையும் கற்போர் கண்டு மகிழ இயலும்.

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் திருப்புமுனைகள் மிகப் பல. இளங்கோவும், சாத்தனாரும், திருத்தக்கத்தேவரும், கொங்கு வேளிரும், கம்பரும், கச்சியப்பரும், வில்லியும் காவியத் திருப்பு முனைகள் அமைத்து மாபெரும் வெற்றி கண்டவர்கள். தனித்தனி வரலாறுகளின் தொகுப்பாயினும் சேக்கிழாரும் சுந்தரர் வரலாற்றில் தடுத்தாட்கொள்ளும் திருப்பத்தை அழகொழுகவே படைத்துக் காட்டுகின்றார்.

காவியங்களில் திருப்பு முனைகள் என்பது பற்றி ஒரு நீண்ட பேராய்வு நிகழ்த்தத் தடம் அமைந்து கிடக்கிறது. திருப்பு



www.saivamonline.com

முனைகள் காவியத்தில் எங்கே, ஏன் வருகின்றன? அதன் இன்றியமையாமை என்ன? இத்திருப்பத்தை வேறு விதமாக அமைத்திருந்தால் மேலும் சுவை கூட்டியிருக்க முடியுமா? கவிஞன் படைத்த ஒரு திருப்பம் காவியப் போக்கில் இயற்கையாக அமைகிறதா? செயற்கை நெடி வீசுகின்றதா? கவிஞன் திருப்புமுனை படைத்து வெற்றி கண்டானா? தோற்றானா? தோற்றால் தோல்வி எதனால் விளைந்தது? திருப்பங்கள் பாத்திரங்களின் பண்பு நல முரண்பாடுகளில் அமைகின்றதா? காவியப் போக்கில் தாமே அவை அமைகின்றனவா? தனி ஒரு பாத்திரத்தின் வாழ்வியல் திருப்பம் காப்பியத் திருப்பம் ஆதல் கூடுமா? காப்பியத் திருப்புமுனைகளுக்குக் காரணங்காட்டி நியாயப்படுத்தும் உரிமை கவிஞனுக்கு உண்டா? எல்லாத் திருப்புமுனைகளிலும் கவிஞன் நடுநிலையோடு காரணங்களை ஆராய்ந்து நியாயப் படுத்தியுள்ளானா? திருப்புமுனைகளுக்கு விதியைக் காரணமாக்குவது எந்த அளவுக்கு ஏற்கத்தக்கது?

மேலை கீழை நாடுகளின் இலக்கியத் திருப்பங்களோடு, தமிழ்க்காவியத் திருப்பங்களை ஒப்பிட இயலுமா? இயன்றால், தமிழ்க் கவிஞர்களின் நிலை என்ன? காப்பியத் திருப்புமுனைகளைத் தனி ஓர் இலக்கிய உத்தியாக வளர்த்து இலக்கணம் காண முடியுமா? தற்கால உரைநடைப் புதினங்களில் காணலாகும் திருப்புமுனைகளுக்கு ஏதேனும் பொதுவான அமைப்பு விதி உண்டா?

இத்தனை நிலைக்களன்களை உள்ளடக்கியுள்ளன காவியத் திருப்பு முனைகள். அறிஞர் பெருமக்கள் நடுநிலை நின்று ஆய்வு நிகழ்த்தித் தமிழ் அன்னைக்குப் புகழ் சேர்ப்பார்களாக.

www.saivamonline.com